பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

வெளிவந்துவிட்டது
A.மகாதேவா B.Sc
அவர்களின்
அசேதன
இரசாயனம்
துரித மீட்டல் செய்யும்
மாணவருக்கு
ஓர் துணை நூல்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50

Revision N tes in
INORGANIC
CHEMISTRY
by
A. MAHADEVAN B.Sc
Now available
at all BooK Shop

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ பங்குனி மீ 09 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 03 (22 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:34

# ஈழத் தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல்லாபம் தேட முயன்றதில்லை

## தமிழன் என்ற உணர்வு அடிப்படையிலேயே உழைக்கிறோம்

### கருணாநிதி உதயனுக்குப் பேட்டி

— சென்னையில் இருந்து அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன் —

சென்னை, மார்ச் 22

ஈழத்தமிழர் பிரச்சினையில் கடந்த முப்பது வருடங்களாக நாம் அக்கறை காட்டி வருகின்றோம். அவர்களது பிரச்சினையை வைத்து நாம் அரசியல் லாபம் தேட முயன்றதில்லை. இப்போதும் அவ்வாறேயாகும்.

தமிழன், தமிழன் என்ற இன உணர்வு அடிப்படையிலேயே நாம் உழைத்து வருகிறோம். குரல் கொடுக்கிறோம்.

இவ்வாறு தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவருமான கலைஞர் முத்துவேலர் கருணாநிதி உதயனுக்கு அளித்த விசேடபேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள திரு. கருணாநிதியின் இல்லத்தில் வைத்து உதயனின் அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி, அவரைப் பிரத்தியேகமாகப் பேட்டி கண்டார்.

இந்தச் சந்திப்பின்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த லோகசபை உறுப்பினர் (எம். பி.) திரு வை. கோபாலசாமியும் உடனிருந்தார்.

இன்னலுறும் ஈழத்தமிழர்களுக்கு, ''தாய்த் தமிழகம்'' என்றும் துணை நிற்கும் எனவும் கலைஞர் கருணாநிதி தமது பேட்டியின்போது தெரிவித்தார்.

திரு. கருணாநிதி உதயனுக்கு அளித்த பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: ஈழத்தமிழர் பிரச்சினையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தி. மு. க. செயற்பட்டுவருகிறது. இந்நிலையில் மற்றைய அமைப்புகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸ், புளொட், ரெலோ, ஈ.பி. ஆர் எல்.எவ் ஆகியவை குறித்து தி. மு. கவின் நிலைப்பாடு என்ன?

கலைஞர்: இந்த இயக்கங்கள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என எதிர்பார்த்தோம். அவர்களால் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. என்ன கார

(4-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

22-03-1988
பங்குனி 9
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 47 முதல் 12.17 வரை
ராகுகாலம்:
3.47 முதல் 4.17 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
கார்த்திகைவிரதம்

குச்சந்திமுனி



மூன்று தடவைகளை இரண்டாக்கினால் தான், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுகிறவை வைக் குறைக்கலாம் என்டு நினைச்சிருப்பினம்.

அதாவது சாலுக்குப் பொருத்தமாய் சப்பாத்துத் தைக்காமல், சப்பாத்துக்கு ஏத்த மாதிரி காலை வெட்டுற புத்திசாலித்தனத்தைப் பாத்தியளே...!

பாண்டிருப்பில்

## கூட்டணிப் பிரமுகர் வேல்முருகு சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச் 22

அம்பாறை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரான திரு. ஆ. வேல்முருகு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காரில் வந்த சிலர் விசாரணைக்காக திரு. வேல்முருகை பாண்டிருப்பில் உள்ள அவரின் வீட்டில் இருந்து அழைத்துச் சென்றனர் என்றும்—

சில மணி நேரத்தில்

[6-ஆம் பக்கம் பார்க்க]

அக்டோபர் 21 அசம்பாவிதத்தின் போது

## மரணமான ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு மாதச் சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த அக்டோபர் மாதம் 21 ஆம் திகதி நடந்த அசம்பாவிதத்தின் போது மரணமான ஊழியர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளைப் போதனா வைத்தியசாலைகள் அமைச்சு ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் 21 பேர் இந்த அசம்பாவிதத்தின் போது மரணமானார்கள்.

இவர்கள் கடமையில் இருந்த பொழுது மரணமடைந்ததன் காரணமாக இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சு. நச்சினார்க்கினியன் போதனா வைத்தியசாலைகள் அமைச்சிடம் கோரியிருந்தார்.

இதனையடுத்தே முதற்கட்ட நஷ்ட ஈடாக, இவர்கள் ஏற்கனவே மாதாந்தச்சம்பளமாகப் பெற்றுவந்தபணத்தைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மரணமானவர்களின் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் தொழில் வசதி வழங்கப்பட்டுள்ளது.

(ஓ-ர)

அம்பாறை மாவட்டத்தில்

## அமைதிப் படைக்கு அதிரடிப் படை உதவி?

கொழும்பு, மார்ச் 22

அம்பாறை மாவட்டத்தில் இந்திய அமைதிப் படைக்கு உதவியாக இலங்கையின் விசேட அதிரடி பொலீஸ் படை உதவலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் காமினி திஸநாயக்கா அண்மையில் இந்தியாவுக்கு விஜயஞ்செய்து பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்ததன் பின்னர் இந்த முடிவெடுக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது.

ஏற்கனவே ஸ்ரீலங்கா இராணுவம் கிழக்கில், விசேடமாக திருமலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது.

(ஓ-எ)



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதியை, அவரது இல்லத்தில் வைத்து, உதயன் அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி திரு. ந. வித்தியாதரன் பேட்டி காணும்போது எடுக்கப்பட்ட படம் (அ)

★ யாழ் மக்கள் வங்கிக் கிளைகளில் வைத்து

## அடகுநகைகள் 28 முதல் கையளிப்பு!

— அலுவலகச் செய்தியாளர் : சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 22

வட பகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டுத் திரும்பச் செலுத்தப்படாது இருந்த நகைகள் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன.

இந்த நகைகளில் ஒரு தொகுதி நேற்று பருத்தித்துறையிலிருந்து கோட்டை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டது.

நகைகளை மீளப்பெறும் பொருட்டு பணம் செலுத்தியவர்களுக்கான நகைகளே இங்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை வழங்குவதற்கென இரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யாழ் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளை (நிலையம் 1), யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளை (நிலையம் 2 ஆகிய

(6-ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையிலிருந்து ஸ்ரீலங்காப் படை வாபஸ்

### 34 வாகனங்களில தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்

பருத்தித்துறை, மார்ச் 22

பருத்தித்துறை ஸ்ரீலங்கா இராணுவ முகாம் முற்றாக மூடப்பட்டுள்ளது. ஞாயிறு காலை 11 மணியளவில் 34 வாகனங்களில் ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் வெளியேறிச் சென்றனர்.

இவர்கள் புறப்படும் போது தமது உடைமைகள், வேலிக் கம்பிகள், விறகுகள், தளபாடங்கள் என்பனவற்றையும் எடுத்துச் சென்றனர்.

சில்லறைப் பொருள்களை முகாமுக்கு அருகாமையிலுள்ள பொது மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர். ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மிகக மகிழ்ச்சியுடன் பருத்தித்துறை மக்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டனர்.

தாம் தென் இலங்கையை நோக்கிச் செல்வதாக இவர்கள் தெரிவித்தனர்.

இவர்களது வாகனங்களுக்கு இந்திய அமைதி காக்கும் படைவீரர்கள பாதுகாப்பு வழங்கி அழைத்துச்சென்றனர்.

மேலும் ஆகாய மார்க்கமாக ஹெலிக்கொப்டர் ஒன்று காழ்ப்பறந்து பாதுகாப்பு வழங்கியது.

ஸ்ரீலங்கா இராணுவம் முற்றாக வாபஸ்பெற்றதை அடுத்து இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரி

[6-ஆம் பக்கம் பார்க்க]

1990 ஆம் ஆண்டு முதல்

## பல்கலைக்கழக அனுமதிக்கு இரண்டு ஜீ.சி.ஈ.(உ/த) அமர்வுகள் மட்டுமே!

— அலுவலகச் செய்தியாளர் ; சுரேஷ்குமார் —

யாழ்ப்பாணம் மார்ச் 22

பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்குத் தகுதி பெறுவதற்காக வழங்கப்படும் ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை அமர்வுகள் இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டில் இருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இப்போது, பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு ஜீ. சி. ஈ உயர்தர பரீட்சைக்கு மூன்று தடவைகள் தோற்றுவதற்கு வசதி உண்டு.

ஆனால் புதிய அறிவிப்பின்படி ஜீ. சி. ஈ. பரீட்சையில் முதற் தடவை அல்லது இரண்டாவது தடவை தோற்றித் தகுதி பெறாவிடில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நகைகள் வந்தது குறித்து அமைதிப்படை

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடமாகாணத்தைச் சேர்ந்த மக்களால், மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட 1,059 தொகுதி நகைகளில் முதலாவது தொகுதி யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுமார் நாலரை வருடங்களின் பின்னர் இந்திய அமைதிப் படையினர் எடுத்த விடாத முயற்சியின் விளை

(6 ஆம் பக்கம் பார்க்க]

## மருதனமடம் பகுதியில் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 22

மருதனமடம் பகுதியில் நேற்று இந்திய அமைதிப் படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இப்பகுதியில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்தே இப்பகுதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஓ-10)

## பிரிகேடியர் காலோன் வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22

இந்திய அமைதிப் படையின் யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன், நேற்று வவுனியாப் பகுதிக்கு விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பினார்.

அண்மையில் புதுடில்லி சென்றிருந்த பிரிகேடியர் காலோன், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தார். (ஓ 10)

## 35 பயணிகள் உயிரிழப்பு

புதுடில்லி மார்ச் 22

மேற்கு வங்காளத்தில் பஸ் ஒன்று புரண்டு ஆற்றில் மூழ்கியதில் 35 பயணிகள் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகின்றது. [ஓ-எ]

## தமிழர் சென்ற பஸ் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பயணஞ்செய்துகொண்டிருந்த பஸ் ஒன்று இனந்தெரியாதோரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒரு பெண் உட்பட 4 பேர் காயமடைந்தனர். (ஓ-எ)

இனிய கல்முறையின் இதயம் ... இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் (பறுெயிலர் குஞ்சுகள் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு) 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சந்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். (2106)

பிறிமா இன லோமன் பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் புறெயிலர் 19ந்திகதி தொடக்கம் விநியோகிக்கப்படுகின்றது அடுத்த விநியோகம் 26ந் திகதி சனிக்கிழமை நடைபெறும் ஸ்ரீ வாணி பத்தாசாலை திருநெல்வேலி சந்தி S M காட்வெயர் 11/6 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பதிவு செய்யவும். [2109]

குளிர்சாதனப் பெட்டி தையல் மெஷின், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு வி. எம். வி நல்லநகன் 218/9, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். [2658]

Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 29-03-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூ 12. 50 [Lohmann]சேவல் ரூ4.00 (சொண்டு வெட்டப்பட்டது, தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும். இல 9. சூராவத்தை ரோட்டு [நந்தையா லேன] சுன்னாகம் [ஸ்டேஷனுக்கு அண்மையில்] (2655)

Uplands Farm Ltd கோழிக் குஞ்சு விநியோகம், 23 ஆந் திகதி புதன்கிழமை (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00 முன்கூட்டியே பதிவு செய்க இல 9 சூராவத்தை ரோட், (நந்தையா லேன்) சுன்னாகம் (ஸ்டேஷனுக்கு அருகாமையில்) (2082

### தேவை

வீட்டில் இருந்து வயது போன நோயாளியை பார்க்கக்கூடிய 40 வயதுக்கு ஏற்பட்ட பெண் Attendant தேவை. சாப்பாடு தங்குமிடம் சம்பளம் வழங்கப்படும் அனுபவமுள்ள தாதிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். No-12. R A தர்பிலேன். வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (2659

யாழ் நகரில் இயங்கும் வெளிநாட்டு முகவர் நிலையத்திற்கு ஒரு பெண் உதவியாளர் தேவை. முன்பு வெளிநாட்டு முகவர் நிலையங்களில் வேலை செய்த அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதன்கிழமை 23-03-88 காலை 9 மணியிலிருந்து 12 மணி வரை நேரில் சமுகமளிக்கவும். தொடர்பு No.21. வேம்படி வீதி, யாழ்ப்பாணம். நிர்வாகி (2115)

அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி தேவை. விலை உட்பட விபரமாகத் தபால் மூலம் தொடர்பு கொள்க R. ராமச்சந்திரன். C/O அம்பாள் பார்மஸி நியூ மார்க்கட் சாவகச்சேரி (2108)

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணி நிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு: கிளின்-கட் இல:- 239. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### சேவை

ELECTRIC COOKERS கிறைண்டேஸ் மிக்ஸிசிறி மோட்டர், றான்ஸ்போமர், றிப்கவிச், சகல மின் உபகரணங்களும் உத்தரவாதத்துடன் றீவைண்டிங் செய்ய, திருக்க Omaga, ManiPav Road. Jaffna (2088)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, 3rd Lane. Power House Road, Jaffna (Near Samy & Co.) (1803)

### மணமகள் தேவை

இந்து மத வேளாள குல பெற்றோர் தமது 30 வயது இங்கிலாந்தில் பொறியிலாளராக தொழில் புரியும் (B Sc. Civl Erg), பிரஜா உரிமை உள்ள மகனுக்கு தகுந்த இடத்தில் மணமகள் தேடுகின்றனர். முழுவிபரங்களுடனும் ஜாதகக் குறிப்புடனும் அண்மையில் எடுத்த புகைப்படப் பிரதியுடனும் விண்ணப்பிக்கவும் புகைபடம் திருப்பி அனுப்பப்படும் வி. இ 94 C/o உதயன் (2112)

### தவறிவிட்டது

முத்தையா ஜெயராஜாவாகிய எனது பாஸ்போட்டும் உழவு இயந்திர பாகம் சாவகச்சேரி பஸ் ஸ்ராண்டில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். அடையாள அட்டை இல:- 520922326V 2102)

வதனி-குமாமூர்த்தி என்பவருடைய அடையாள அட்டை 687501063-V 19-03-88 இல் கோயில் வீதியில் [நல்லூர்] தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இல 96 தபார்கந்தோர் வீதி திருநெல்வேலி தெற்கு ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் (2103

### மக்கள் முகம்

ஆசிரிய கல்லூரி கத்தோலிக்க மன்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 22 பலாலி ஆசிரிய கல்லூரி கத்தோலிக்க மன்ற புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் எஸ் பஸ்ரியாம்பிள்ளை, உபதலைவர் எஸ் யேசுதாசன், செயலாளர் எஸ். யூட் மரிய ரெத்தினம், உப-செயலாளர் திருமதி டி. மேரி மாகிரற் பொருளாளர் செல்வி ஜே ஆர். எம். மரியநாயகம், உபபொருளாளர், எஸ். மரியநாயகம், பதிப்பாசிரியர் செல்வி எம். எம். அல்பிரட். (இ-க-10)

## தேவை

டுபாயில் ரெயிலர் வேலைக்கு உடனடியாக 18 — 38 வயதுக்குள் உள்ளவர்களும், மாலைதீவுக்கு மாபிள் மேசன் வேலைக்கு அனுபவம் உள்ளவர்களும், குவைத் Hospital Cleaners பெண்களும், அபுதாபி, பாறீன், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வீட்டு வேலைக்குப் பணிப் பெண்களும் உடன் தேவை.

தொடர்பு:- க. சிவசுப்பிரமணியம்,
91/16, இந்துமகளிர் லேன்,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
(2117)

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு அனுபவமும், தகுதியும், திறமையும் உள்ளவர்கள் உடன் தேவைப்படுகிறுர்கள்.

1. அச்சுக்கோர்ப்பாளர் (ஆண்கள் மட்டும்) [ தமிழ் & ஆங்கிலம் ]
2. புத்தகம் கட்டுபவர்
3. இயந்திர இயக்குநர் [பிளேட்டின் இயந்திரம், & ஹைடில்பேர்க் சிலிண்டர் ]

விண்ணப்பதாரர் தம்மைப் பற்றிய சகல விபரங்களும் கொண்ட விண்ணப்பத்துடன் கீழ்க் கண்ட விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்:-

**ஷப்ரு**
(வர்த்தக அச்சகப் பகுதி)
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## SCIENCE ACADEMY

NALLUR

## Special English CLASSES

விசேட ஆங்கில மொழி வகுப்புக்கள்

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

இரு பிரிவுகளாக வகுப்புகள் அமையும்

1 A/L / தொழில் நுட்ப / பல்கலைக் கழக மாணவர்கட்கு மொழியின் சகல அம்சங்களுடன் கூடிய விரிவான கற்கை நெறி 6 மாதம்

2. 10ஆம் 11ஆம் ஆண்டு மாணவர்கட்காகிய வகுப்பு: 8 மாதம்

ஆரம்பம்:
30 - 03 - 1988 3 p m.

மேலதிக விவரங்களுக்கு;
நிர்வாகியுடன் தொடர்பு கொள்க.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்

## MODERN BRIGHTON SCIENCE ACADEMY

VADDUKODDAI
(யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில்)

88 A/L

வினவிடை வகுப்புக்கள்

ஆரம்பம்:-24-03 88 வியாழக்கிழமை

★ பொருளியல் ★
திரு. கலாகரன்
THU— 2 30—4 30 P. M.
FRI— 6.00—7.00 P. M.

✳ இரசாயனவியல் ✳
திரு. மக்ஸி
TUE, THU— 4.30 P. M.

## விற்பனைக்கு



புதியனவும் பழையனவும்- ஆகிய
கதவுகள்,
கதவு நிலைகள்,
யன்னல்கள்,
ஓடுகள்,
மரங்கள்,
சிலாகைகள், தீராந்திகள்

முதலியன குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. பொருட்களை நேரில் வந்து பார்வை இடலாம்.

விவரங்கள்:- ந. யோகதாசன் வவுனத்தம்பை வீதி, குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

(ii) ந சண்முகராசா 'ஜமுனு' சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

ஆகியவர்களிடம் அறியலாம். (2657)

## Computer course

புதிய பிரிவுகள்

| 25 - 03 - 1988 |

I-FEE: 400/-

தெல்லிப்பளையிலும்! நெல்லியடியிலும்!

| IDP | IDP |
|---|---|
| துர்க்காபுரம், K. K. S. Rd, TELLIPALLAI. | C/o Modern Education Centre KARAVEDDY. |
| Time: 3. 30 p. m. | Time: 9. 30 a. m |

(2105)

## New Master Institute

B. M C. Lane, Jaffna.

## PAPER CLASSES

(WED & FRI)

நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| 7. 30 - ZOO | - | நாகநாதன் |
| 8 30 - HE | - | மக்ஸி |
| 9 30 - PHY | - | சத்தியசீலன் |
| 10. 30 - BOT | - | செல்வநேசன் |

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### கேள்விப்பத்திரம்

எமது மேற்படி சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம மூலம் விற்பனைக்குண்டு. மேலும் முழு விபரங்களும் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 500/- தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பம் 29 - 03 - 1988 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப 3. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கம். தெல்லிப்பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்'' என தவறுது குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் உபசபையின் முன்னிலையில் 29 - 03 - 1988 ஆம் திகதி பி. ப 3 . 00 மணிக்கு திறக்கப்படும்.

பொது முகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம்,
21 - 03 - 1988 தெல்லிப்பளை.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் சுமார் 1800 சரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

முடிவு திகதி: 25-03-88 வெள்ளிக்கிழமை 3-00மணி வரை

விண்ணப்பப் பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலைநேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 1988-03-18

## 6 ஆம் மாத நினைவஞ்சலி




செ. இ. கிளென்னி

மலர்வு: 15 - 09 - 1963
மறைவு: 22 - 09 - 1987

இல்லை இல்லை நீ இங்கு
இன்று நீ எங்கேயோ
உயிர் ஆசை கொண்டவர்க்கு
உயிரையே கொடுத்தாயோ
எமை மறந்து எங்கு சென்றுய்
என் செல்வா, தவப்புதல்வா
எங்கே நீ இருந்தாலும்
உன் ஆன்ம சாந்திக்காய்
எப்போதும் எம் நினைவு
அஞ்சலிகள் உனக்காகத்தான்.

[2119] அம்மா, பப்பா, சகோதரர்கள்.

## 140 ஆம் நாள் நினைவஞ்சலி



22 - 3 - 1988

துரையப்பாப்பத்தர் கிருஷ்ணசாமி

தோற்றம்: 7 - 11 - 1914
மறைவு: 3 - 11 - 1987

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருந்தீர்கள் குலவிளக்கே எங்களை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பத் தெய்வமே உங்கள் முகம் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்.
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள், மைத்துனிகள், உற்றுர்,
உறவினர், நண்பர்கள்.

30 (113), கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (2104)

## விசேட அறிவித்தல்

வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31—03—1988 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை பேராதனை பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது என்பதை அறியத்தருகிறேன். இந்நிறுவனத்தில்

**G. A. Q. 89** க்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. எனவே 18-3 88 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விண்ணப்பிக்கவும்.

நேர அட்டவணை பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:-

சனி ஞாயிறு { பி ப. 1 0 -2 00 தமிழ் 2 00-3 00 புவியியல் 3 00-4 00 இந்து நாகரிகம். 4 00 5 00 பொருளியல், 5 00-6 00 [illegible]

மேலும் விபரங்கட்கு: நிர்வாகி 'நெயின்ஸ்' இன்ஸ்ரிரியூட் நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜானகியும், ஜெயலலிதாவும் பதவிக்காகவே மோதுகிறார்கள்

## ரகுமான் கான் பேச்சு

மதுரை, மார்ச் 21
"ஜானகி அம்மாளும் ஜெயலலிதாவும் கொள்கைக்காக மோதவில்லை பதவிக்காகத் தான் மோதுகிறார்கள்" என்று முன்னாள் தி. மு. க. எம். எல் ஏ ரகுமான் கான் கூறினார்.

மதுரையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் எம் எல் ஏ ரகுமான்கான் பேசியதாவது:-

அதே நிலா

எனக்கு பதவியைப் பற்றி கவலை இல்லை அன்று வந்ததும் அதே நிலா இன்று வந்ததும் அதே நிலா என்ற எண்ணத்தோடு இருக்கிறேன் தி. மு. க எத்தனையோ சாதனைகளை சந்தித்துப் உள்ளது. அப்படி இருந்தும் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக இருக்கிறது. இதே போல் வேறு எந்த இயக்கமும் இருக்க முடியாது.

தி. மு. க. போல் எந்த கட்சியிலும் தேர்தல் நடந்து இருப்பதை பார்த்து இருப்பீர்களா? சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதற்கு ஏற்ப தி. மு. கவுக்கும் சட்ட திட்டங்கள் உள்ளன.

இ. காங்கிரசை எடுத்துக் கொண்டால் மத்திய அரசு என்ன நினைக்கிறதோ அதுதான் அவர்கள் சட்டம் அதேபோல் அ. தி. மு கவிலும் சட்ட திட்டம் கிடையாது.

அ தி. மு க மோதல்

அ. தி. மு. கவை எடுத்துக் கொண்டோமானால் இரு அணியாக இருக்கிறது இரட்டை இலை சின்னம் யாருக்கு? கட்சி ஆபிஸ் யாருக்கு என்று அடித்துக் கொள்கிறார்கள்.

அதில் ஒரு அணியான ஜெயலலிதா அணியில் ஜெயலலிதாதான் பூலோக சொர்க்கம் என்று எண்ணி தவம் கிடக்கிறார் நெடுஞ்செழியன்.

நடமாடும் பல்கலைக்கழகம் என்றும் தம்பி தலைமை தாங்க வா என்றும் அண்ணா அழைத்த நெடுஞ்செழியன் இப்போது ஜெயலலிதாவை தஞ்சம் அடைந்திருக்கின்றார்'. இப்படி ரகுமான்கான் சொன்னார். (எ-உ)

## தமிழகத்திலிருந்து

# அமைதிப் படையின் பணி மர்மமாக உள்ளதாம்

## சிறிமா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 22
ஒரு லட்சம் பேர் கொண்ட இந்திய அமைதிப் படை ஆற்றும் பணி மர்மமாக உள்ளது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புச் செய்தியாளரிடம் அவர் மேலும் சொன்னதாவது;

கடந்த பத்துத் தினங்களாக திருமலையில் நிறைய வன்செயல்கள் இடம் பெற்று வருகின்றன.

ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளைக் கொண்டு வந்த பின்னரும் இந்திய அமைதிப்படை என்ன செய்கிறது? பெரிய மர்மமாக உள்ளது.

திருமலைத் துறைமுகத்தில் இந்தியக் கடற்படை நிற்கின்றது இந்திய விமானப்படைவிமானங்கள் சீனன்வாடியை பயன் படுத்துகின்றன அப்படி இருந்தும் ஏன் செயல்களை ஏன் அவர்களினால் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது 8 மாதங்களாகியும் அமைதிப் படையினால் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத பெரிய பிரதேசமா திருமலை?

அமைதிப் படையினால் முடியவில்லை என்றால் எப் படையைக் கொண்டு திருமலையைத் துப்பரவு செய்ய அனுமதிக்கட்டும் இன்று போன்று என்றும் நிலைமை மோசமாக இருந்தது இல்லை.

ஏதேன் இலங்கையில் கைது செய்யப்படுபவர் காணாமற் போவது பெரிய பிரச்சினையாகி வருகின்றது.

பிரதமர் காந்தி பஞ்சாப், அஸ்ஸாம் மாநிலங்களில் பொதுத் தேர்தலை நடத்தாது விட்டது போன்று, வடக்கையும் கிழக்கையும் திரு ஜெயவர்த்தனாவும் விடட்டும். ஏனைய ஏழு மாகாணங்களில வது தேர்தலை நடத்தலாமே!

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். [ஒ-எ]

### குண்டு வெடிப்பு ஏற்படுத்திய பதற்றம்

வடமராட்சி 22
கடந்த சனிக்கிழமை நண்பகல் வல்லைப்பக்கமாக கேட்ட குண்டு வெடிப்புச் சத்தத்தினால் வடமராட்சி மக்கள் பெரிதும் பதற்றம் அடைந்தனர்.

இந்திய அமைதிப் படையினரின் பரீட்சார்த்த குண்டு வெடிப்பு என்று பின்னர் அறிய வந்தது. (ஒ-க-160)

# சங்கானை மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

## பிரியாவிடை வைபவத்தில் உரை

வட்டுக்கோட்டை, மார்ச். 22
சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பத்து வருடங்களுக்கு மேலாக டாக்டராகக் கடமையாற்றிய பெருமை டாக்டர் எம். ஏ. இராசரத்தினத்துக்கு உண்டு. கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளுடன் சிறந்த சேவையாற்றிய டாக்டர் இராசரத்தினம் சங்கானைப்பகுதிமக்களின் நன்மதிப்பைப் பெற்றதொடு நீங்காத நினைவுடையவராகவும் திகழ்கிறார்.

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சுமார் பதினொரு வருடங்கள் டாக்டராகத் தொடர்ந்து கடமையாற்றி ஓய்வு பெறுவதை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரியாவிடைவைபவத்தின் போது பாராட்டுரை வழங்கிய திரு. எஸ். சாம்பசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கானை அரசினர் வைத்தியசாலை மண்டபத்தில் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவம் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எம். பி, பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

நில அளவையாளர் திரு. எஸ் சபாநாதன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

சமாதான நீதவான் திரு. அ. மு. அருணாசலம் டாக்டர் இராசரத்தினத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சங்கானை அரசினர் வைத்தியசாலை ஊழியர் திரு எஸ். சண்முகராசா பாராட்டுரை வழங்கினார்.

சங்கானை கிழக்கு கிராமோதைய சபை முன்னாள் தலைவரும் யாழ் பிரதேச சுகாதார சேவைகள் திணைக்கள உத்தியோகத்தருமான திரு. என். செந்தில்நாதன், திரு. வ. சண்முகம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (இ1-61)

விஜயானந்தன் கொலை :

# புலிகள் மறுப்பு

## சென்னையில் அறிக்கை

சென்னை, மார்ச் 22
கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் கொலை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சென்னையில் அறிக்கை ஒன்றை விடுத்தது.

புலிகள் இயக்கம் தான்,விஜயானந்தனை கொலை செய்தது என்று குற்றஞ் சாட்டுவது உண்மைக்கு முரணானது

விஜயானந்தன் கொலை அது சம்பந்தமாக புலிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு ஆகியன விஷமத்தனமான சக்திகளால் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன

விடுதலைப் புலிகளுக்கும் திரு. விஜயானந்தனுக்கும் இடையே உள்ள அரசியல் கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி இயக்கத்துக்குக் களங்கம் கற்பிக்க எடுக்கப்பட்ட விஷமத்தனமான முயற்சி இது"

இப்படி புலிகள் இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக "இந்து" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-எ).

## சட்ட விரோத மின் பாவனை சமூக விரோதச் செயல்

"சட்ட விரோத மின் பாவனையாளர்கள் சட்டபூர்வமாக மின்சாரம் பெறும் பாவனையாளர்களுக்கு பெரும் இடையூறுகளையும் - கஷ்டங்களையும் ஏற்படுத்துகிறார்கள். அது மாத்திரமன்றி அநியாயமாக மரணங்களையும் எதிர்நோக்குகிறார்கள். எனவே சட்ட விரோத மின்பாவனையை சமூகவிரோத செயலாக மக்கள் கருதவேண்டும்.

சுன்னாகம் பிரசைகள் குழுவின் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் இப்படிக் கூறினார்.

சுன்னாகம் ஒக்ஸ்போட் ரியுசன் சென்ரறில் மக்களும் மின் பாவனையும் என்னும் தலைப்பில்நடந்த கருத்தரங்கில் தலைமை வகித்து அவர் உரையாற்றினார். (இ-27)

# தடைப்பட்ட ஜீ. சீ. ஈ. பரீட்சை தொடர்பாக 'கைஸ்' வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச்22
1987 இல் தடைப்பட்ட ஜீ.சீ.ஈ. சதாரணதாரப் பரீட்சையை உடனடியாக நடத்தக் கோரி மகஜர் சமர்ப்பித்தவர்கள் அனைவரும் அதன் பிரதிகளை எம்மிடம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு மாணவர் இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சையை உடனடியாக நடத்தக் கோரி நாம் நடத்தி வரும் கையொப்ப இயக்கத்துக்கு அனைவரது ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை.

இதே கோரிக்கையை முன்வைத்து வெகுஜன ஸ்தாபனங்கள். அதிபர் ஆசிரியர் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் போன்றவை மகஜர்களை அனுப்பியிருந்தன

இம்மகஜர்களின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளை எமது சங்கத்தவர்களினூடாக அல்லது த. பெ. இல 30 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பி வையுங்கள்.

கையொப்பப் போராட்டம் பற்றிய மாணவர்களின் கலந்துரையாடல் ஒன்றும் விரைவில் நடத்தப்படும். ...


நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு





நிதித் துறையில் உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

✱ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✱ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✱ பணமாக ✱ காசோலையாக ✱ வங்கிக் கணக்கூடாக

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
★ வி. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
★ ஆர். பாலசுப்பிரமணியம்.
★ ஓ. சி. எம். ஹசன்பாரி, B.A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வலிவடக்கிலும் வாந்திபேதி பரவும் அபாயம்

காங்கேசன்துறை, மார்ச் 22

வலி வடக்கிலும் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் சுகதார தார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

அளவெட்டி, மாசியப்பிட்டியில் ஒருவரும், அளவெட்டி கல்லாரையில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரும், மல்லாகத்தில் ஒருவரும் இந்நோய்க்கு ஆளாகியிருப்பதாக சந்தேகிக்கப்பட்டு அவர்களுக்கு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும் இந்நோய் பரவாது இருக்க தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரன் தலைமையில் சுகாதார பரிசோதகர்களும், சுகாதார நலத் தொண்டர்களும் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தடுப்பு மருந்துகள் கொடுத்தல், கிணறுகளுக்கு "குளோரின்" போடுதல் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-68)

## ஜி.ஏ கியூ பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முயற்சிப்பதாக உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஏப்பிரல் மாதத்தில் நடைபெற இருக்கும் முதல்கலைத்தேர்வு (ஜி. ஏ. கியூ) பரீட்சைகளை இம்முறை யாழ்ப்பாணத்தில்நடத்த முயற்சிப்பதாகஉயர்கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவாரிப்பட்டதாரி மாணவர் ஒன்றியம் திரு. குமார் பொன்னம்பலம் ஊடாக உயர்கல்வி அமைச்சரான ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கோரியது.

இதனையடுத்தே உயர்கல்வியமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதில்லை என பேராதனைப் பல்கலைக்கழகமும் முன்னர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-க)

## கொத்தணி உதவி அதிபர்

புங்குடுதீவு, மார்ச் 22

புங்குடுதீவு இருப்பிட்டி அ. மி. த. க வித்தியாலய அதிபர் திரு கா. கனகசபை புங்குடுதீவுக் கொத்தணி உதவி அதிபராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (இ-131)

# ஈழத் தமிழர் பிரச்சினையை . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ணமோ எனக்குத் தெரியவில்லை. ஒற்றுமையாக இருந்திருந்தால - உண்மையாக விடுதலைக்காக அவர்கள் அனைவரும் போராடியிருந்தால் - தமிழ் ஈழ விடுதலை என்றைக்கோ கிடைத்திருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டார்கள். என்றாலும் இப்போது களத்தில் நின்றுபோராடிக்கொண்டிருப்பவர்கள் விடுதலைப் புலிகள் என்பதால், நாம் அவர்களை ஆதரித்துச் செயற்படுகின்றோம்.

### எம் ஜி ஆர் நிலை

கே: ஈழத்தமிழர்பிரச்சினையில் மறைந்த தமிழக முதல்வர் எம் ஜி இராமச்சந்திரன் எடுத்த நடவடிக்கைகள் குறித்து...?

கலைஞர்: அவர் தன்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகவே- ராஜீவ் சாந்தியின் வற்புறுத்தலினால் - இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்திருக்கிறார். அதனை அவரது கட்சிக்காரர்களே- குறிப்பாக எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மையாரே-தற்போது கூறிவருகிறார். இப்படிப்பட்ட நிலையை எம் ஜி ஆர். எடுக்காமல் விட்டிருந்தால் தமிழ் ஈழப் பிரச்சினை இவ்வளவு சிக்கலாக மாறியிருக்காது.

கேள்வி: ஈழத் தமிழர் பிரச்சினையை முன்வைத்து ஏற்கனவே உங்கள் பதவியை இராஜினமா செய்திருந்தீர்கள்...

கலைஞர்: நானும்எமது கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் எமது சட்டமன்றப் பதவியை இராஜினமாச் செய்திருந்தோம்.

கேள்வி: இந்தப் பாணியிலே, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலையும், ஈழத் தமிழர் பிரச்சினையை மட்டும் முன்வைத்து - தமிழர் மக்களின் ஏகோபித்த கருத்தை வெளியிடும் ஒரு தேர்தலாக அதனை வெளிப்படுத்தி - அத்தேர்தலை தி. மு. க. அணுகுமா?

கலைஞர்: தேர்தலில் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து மக்களை அணுகுவோம். அவற்றில் ஒன்றாக ஈழத்தமிழர் பிரச்சினையும் இருக்கும்.

### ஈழத் தமிழரின் விருப்பம்

கேள்வி: தமிழக முதல்வர் பதவி தங்களைத் தேடிவர வேண்டும் என்பதே ஈழத் தமிழரில் பெரும்பாலாரேனாரின் விருப்பம். அந்த விருப்பம் நிறைவேறி தாங்கள் தமிழக முதல்வராக வந்தால ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து உடனடியாக என்ன நடவடிக்கைகளை எடுப்பீர்கள்?

கலைஞர்: யூகத்திற்கு எல்லாம் நான் பதிலளிக்க முடியாது. அப்படி ஒரு நிலைவருப்போது செய்ய வேண்டியதைச் செய்வேன்.

கேள்வி: தங்களுடைய பிறந்தநாள் பரிசாக விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட்ட பரிசை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது அவர்களுடன் இணங்கிப் போகின்றீர்கள். இந்த இரண்டு நிலைமாற்றத்துக்கும் இடைப்பட்ட நிலையை எடுத்துக் கூறுவீர்களா?

கலைஞர்: இது குறித்து நான் ஏற்கனவே பலமுறை விளக்கமளித்திருக்கிறேன். இப்போது இந்த இரண்டு நிலைகளையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப்பார்த்து முடிவெடுக்கும் சூழ்நிலை இல்லை. களத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள் விடுதலைப் புலிகள். தமிழினம் இன்று வாழ்வதா? சாவதா? என்ற கேள்விக்குறி நிலையில் இருக்கிறது. இப்போது நாம் பழைய நிலைப்பாடுகள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்துக் கொண்டு தமிழினத்தை அழிய விட்டு விட முடியாது.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தாங்கள் செயற்பட்டு வருவது அரசியல் லாபத்துக்காகவே என்று சில அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இது குறித்து தங்கள் கருத்து...?

கலைஞர்: 1958 ஆம் ஆண்டு முதல் தி.மு க. ஈழத்தமிழர் பிரச்சினையில் அக்கறைகாட்டி வருகிறது. இப்போது புதிதாக சிலபேர் தி மு கவின் நல்லநோக்கத்தை திசை திருப்பிப் பார்க்கிறார்கள். அது தமது அரசியல் லாபத்திற்காக அவர்கள் செய்வது. ஆனால் தி மு. கவைப் பொறுத்த வரையில் இதில் என்றும் அரசியல் லாபம் தேடவேண்டியதில்லை. 'தமிழன், தமிழன், என்ற இன உணர்வின் அடிப்படையிலேயே நாம் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கேள்வி-- ஈழத்தமிழர் பிரச்சினையில் மற்றைய கட்சிகள் குறிப்பாக அ. தி மு க [ஜானகி அணி] அ. தி. மு. க (ஜெயலலிதா அணி) தமிழக முன்னேற்ற முன்னணி ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கலைஞர்:- ஈழத்தமிழர்களுக்காக யார் குரல் கொடுத்தாலும் நாம் அவர்களை வரவேற்கவேண்டும்.

கேள்வி:- இப் பிரச்சினையில் நிலைப்பாட்டிற்கு இணைவாகப் போகக்கூடியதாக இந்தக் கட்சிகள் செயற்பட்டால் அவர்களையும் இந்த விடயத்தில் ஒன்றிணைத்து இந்தப் போராட்ட[illegible] முன்னெடுப்பீர்[illegible]

கலைஞர்: [illegible] அப்படி ஒரு நிலை[illegible] உருவாகும் போது [illegible] யோசிப்போம்.

### ஊழல் விவகாரம்

கேள்வி: கடந்த 10 ஆண்டுகள் அ. தி. மு க ஆட்சிக்காலத்தில் அமைச்சர்கள் பெரும் ஊழல்களில் ஈடுபட்டதாகவும் லஞ்சம், வங்கியதாகவும் கூறப்படுகிறதே நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இவை குறித்து விசாரணை நடத்த உத்தரவிடுவீர்களா?

கலைஞர்:- உங்கள் பத்திரிகை இலங்கையில் வெளியிடப்படுவது அதற்கு தமிழ் நாட்டில் நிகழும் ஊழல்கள் பற்றி நான் குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமானதல்ல.

கேள்வி:- ஈழத் தமிழர் தமிழ் நாட்டை தங்கள் தாய் நாடாகவே கருதுகிறார்கள் ...

கலைஞர்-- உண்மைதான் ஆனால் அது வேறு நாடு இது இந்தியாவின் ஒரு மாநிலம் இங்கு நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் குறித்து அந்த நாட்டுப் பத்திரிகைக்கு நான் பேட்டியளிப்பது மரபல்ல.

கேள்வி:- எம் ஜி. ஆர் மறைவுக்குப் பின்னர் அ. தி மு க இரண்டாக உடைந்ததற்கு எம். ஜி ஆர் தமக்குப் பின்னர் இரண்டாவது வரிசை தலைவர்களை உருவாக்காதது ஒரு காரணம் எனக் குற்றம் சுமத்தப் படுகிறது. இந்த விடயத்தில் தி. மு. கவைப் பொறுத்த வரை நீங்கள் இரண்டாவது வரிசை தலைவர்களை உருவாக்கி வருகின்றீர்களா?

கலைஞர்:- தி. மு. க, அ. தி மு. க இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை நடுநிலையாளர்கள் அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள் ஆனால் எம் ஜி. ஆர் மறைவுக்குப் பின்னர் அ. தி. மு.க பற்றி நான் கருத்து ஏதும் கூற விரும்பவில்லை தி, மு. கவைப் பொறுத்தவரை அது அடிப்படையிலிருந்து ஜனநாயக ரீதியில் உருவாக்கப்பட்ட ஓர் இயக்கம் அதனால் தி மு கவின் எதிர்காலம் என்றைக்கும் கேள்விக் குறிக்கு ஆளாகமாட்டாது - அது ஆட்சியில் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி

### ஜெயலலிதா

கேள்வி;- ஜெயலலிதா தானும் - விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசி ஆலோசனை நடத்தி வருவதாகவும், ஆனால் அதனை வெளியே தாம் அறிவிக்கவில்லை என்றும் ஆனால், கலைஞர் மட்டும்தமக்கும் புலிகளுக்கும் உள்ள உறவைப் பகிரங்கமாக அறிவித்துஅதன் மூலம் அரசியல் லாபம் பெற முயற்சிப்பதாகவும் குற்றம் சுமத்துகிறார். அது குறித்து தங்கள் கருத்து......?

கலைஞர்:- நான் ஒன்றும் கூறவிரும்பவில்லை.

திரு கோபாலசுவாமி (குறுக்கிட்டு):- ஜெயலலிதா மூன்று தடவை புலிகளுக்கு ஆள் அனுப்பியிருக்கிறார் - தம்மைச் சந்திக்கும்படி கோரி. பாவம்! அம்மையார் இப்படி ஆள் அனுப்புகின்றார். என்னதான் கூறப் போகின்றார் என்பதைப் பார்ப்போம்'' என்று புலிகள் பிரதிநிதிகள் சிலர் அவரைச் சந்திக்கச் சென்றனர் - இவ்வளவு தான் நடந்தது இதனை அம்மையார் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்.

கேள்வி:- இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி......?

கலைஞர்:- 'தாய்த் தமிழகம் என்றும் உங்களுக்குத் துணை நிற்கும்' என்பதுதான். (இ உ)

## யாழ். மாவட்ட சாரணிய தலைவியர் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ் மாவட்ட சாரணியத் தலைவியர் பயிற்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கடந்த 18ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை நடைபெற்றது.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சாரணிய மாவட்ட ஆணையாளர் தலைமையில் நடந்த இப் பயிற்சியில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 50 சாரணியர் தலைவிகள் கலந்துகொண்டனர்.

இதில் பங்குபற்றத் தவறிய சாரணிய (பாடசாலை) ஆசிரியர்களுக்கு வேறு ஒரு பயிற்சி விரைவில் நடத்தப்படும்.

புதியசாரணிய குழாம்கள் ஆரம்பிப்பதற்குரிய எந்த முயற்சிகளும் ஒழுங்குகளும் யாழ் மாவட்ட ஆணையாளர் திருமதி கே. அரியரத்தினம் மூலமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## குடிதண்ணீர் தட்டுப்பாடு

புங்குடுதீவு, மார்ச் 22

புங்குடுதீவில் சென்ற வருடம் டிசம்பர் மாதம் பெய்த மழையின் பின்பு இன்றுவரை மழை இல்லாமையால் மக்கள் குடிதண்ணீருக்கு கஷ்டப்படுகின்றனர்.

புங்குடுதீவில் ஒரு சில பகுதிகளில் மட்டும் குடிதண்ணீர் இருப்பதனால் மக்கள் பல கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகச்சென்று தண்ணீர் எடுத்து வருகின்றனர். (இ-131)

## பாடநூல்

புங்குடுதீவுக் கொத்தணிப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் கொத்தணி அதிபருக்கூடாக வழங்கப்பட்டன. (இ-131)

## கோவிலில் கொள்ளை

கரவெட்டி, மார்ச் [illegible]

பருத்தித்துறை சிவன் கோவிலில் இரவோடிரவாக கதவு உடைக்கப்பட்டு கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

விக்கிரகங்களை கிளப்பி அதன் அடியில் இருந்த பெறுமதி வாய்ந்த தகடுகள், மற்றும் இயந்திரப் பொருள்கள், கோயில் விளக்கு பாவனைப் பொருள்கள் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டன. (இ-70)


## பிரயாண ஒழுங்குகள்

**சவூதி அரேபியா**

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல்வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபரேர்ஸ் | 25-40 |

**குவைத்**

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

இருபாலாரும் 18-35 வரை (தமிழ் முஸ்லிம்) 20-3-1988க்குள் 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

**குவைத்**

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சலரி K.T. 70 டினார்.

2 மணித்தியாலம் மேலதிக வேலை

3 வருட ஒப்பந்தம்

சாப்பாடு. தங்குமிடம், வைத்திய வசதி எல்லாம் இலவசம்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி**

666, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)



## பிரயாண ஒழுங்குகள்

### Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | AUTO இயந்திர வல்லுநர் | 750 | SR |
| 2. | கனரக வாகன சாரதிகள் | 650 | SR |
| 3. | LUBE தொழில் நிபுணர் | 750 | SR |
| 4. | கனரக சாதன இயந்திர வல்லுநர் | 750 | SR |
| 5. | மோட்டார் REWIND நிபுணர் | 750 | SR |
| 6. | AUTO A/C தொழில் நிபுணர் | 850 | SR |
| 7. | தச்ச வேலைக்காரர் | 700 | SR |
| 8. | AUTO மின்சார தொழிலாளி | 700 | SR |
| 9. | Wheel Balance and Align Spcialist | 800 | SR |
| 10. | வர்ணம் தீட்டுவோர் | 650 | SR |
| 11. | தட்டு, முட்டு, மெத்தை உறை போன்ற சாதனங்கள் அளிப்பவரின் தொழிலாளி | 800 | SR |
| 12. | கருதியை அதிகரிக்கச் செய்யும் நிபுணர் | 800 | SR |
| 13. | சுமாஸ்தா | 650 | SR |
| 14. | Plumber (காரியத்தினுல் குழாய்கள், தொட்டிகள் சீர் செய்பவர்) | 650 | SR |
| 15. | Welders | 650 | SR |
| 16. | கடைச்சல் இயந்திர தொழில் நிபுணர் | 700 | SR |
| 17. | தச்சு வேலைக்காரர் (Carpenters) | 650 | SR |
| 18. | மேசன் (Masons) | 650 | SR |
| 19. | இயந்திர பொறியியலாளர் | 2200 | SR |
| 20. | மின்னியல் | 2500 | SR |
| 21. | மின்பட வரைஞர் (Electrical Draughtsman) | 1500 | SR |
| 22. | Electricians (மின்சார தொழிலாளி) | 700 | SR |
| 23. | குளிரூட்டியியல் தொழில் நிபுணர் | 800 | SR |
| 24. | Secretary / Typist | 800 | SR |
| 25. | Telex Operator | 800 | SR |
| 26. | தோட்டக்காரர் Gardeners | 350 | SR |
| 27. | துப்பரவாக்கிகள் | 350 | SR |

முக்கியகுறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4 88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை செய்ய சமூகம் அளிக்க வேண்டும். அதன்பின் ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம் இதற்குத் தேவையானவை பின் வருவன:-

வயதெல்லை 21 - 50 வரை

1. Pass port கடவுச் சீட்டு
2. மூன்று (3) பாஸ்போட் சைஸ் படம்
3. வேலைசெய்த தொழில் சான்றிதழ்

இவையாவும் கொண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

### 2. Kuwait Cleaners 30 KD

Age 18 — 48 வரை

மற்றும் Kuwait, Singapore, Abudhabi ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பணிப்பெண்கள் (House Maid) தேவை

போக விரும்புவோர் உடன் 1 முழுக் கலர் படம், 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் தொடர்பு கொள்ளவும். போக விரும்பும் யாவரும் எமது காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,

**T. V. TRAVELS**

**BROWN ROAD :: KOKUVIL.**



## சவூதி அரேபியா ★ குவைத் ★ பஹாரின் ★ அபுதாபி ★ சிங்கப்பூர்

சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| . | கிளீனிங் லேபர் வயது 21 — 40 சம்பளம் : 400 SR | 50 பேர் தேவை |
| 2. | சாரதி L. V. வயது 22 — 35 சம்பளம் : 750 SR | 5 பேர் தேவை |
| 3. | சாரதி H. V. வயது 22 — 40 சம்பளம் : 800 SR | 3 பேர் தேவை |
| 4. | குக் (சமையல்காரர்) வயது 21 — 40 சம்பளம் : 650 SR | 5 பேர் தேவை |

குவைத் :

ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்

வயது 17க்கு மேல், சம்பளம் : 35 QD

★ குவைத், பஹாரின், அபுதாபி, சிங்கப்பூர்.

★ கவுஸ்மேட் உடனடிப் பிரயாணம்.

**அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!**

குறைந்த கட்டணத்தில் மனம் நிறைந்த பிரயாணம்

**சவூதி அரேபியா:**

எயர்ப்போட் கிளீனர்ஸ்

001 பேர் தேவை. சம்பளம் 350 + 100

கட்டுப்பணம் 8000/-

(ஒப்பந்தம் 5 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு :- முற்பணம் அறவிடப்படமாட்டாது. செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை மணி 8-30 முதல் மாலை 4-30 மணிவரை நிலையம் திறந்திருக்கும்.

ஏமாற்றத்தைத் தவிர்த்து நம்பிக்கையுடன் குறித்த தவணையில் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும் சுன்னாகம் கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸுடன்

தொடர்பு:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எது விவேகம்? ஒவ்வொரு விநாடியும் உழைப்பிலேயே செலவிடும் நேரங்கள் வீணாகப் போவதில்லை என்பதை உணர்வதே! உணர்ந்து செயல்படுவதே உண்மையான விவேகம்.

— எமர்ஸன்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:—292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805 22078
யாழ்ப்பாணம்.
22 03 1988 சு. பெ. இல: 63

## நிவாரணம் மறுமுகமோ?

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளாலும், இந்திய அமைதிப் படையினராலும் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் குடும்பங்களுக்கு — அவர்களின் பராமரிப்பில் வாழும் குடும்ப அங்கத்தவர்களுக்கு — நிவாரண உதவிகள் வழங்கப்பட இருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இது சம்பந்தமான சகல விவரங்களையும், கிராம சேவையாளர்கள் ஊடாக, யாழ் அரச அதிபர் சேகரித்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் போலவே ஏனைய தமிழ் மாவட்டங்களிலும், தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஒழுங்குகள் செய்யப்படும் என நம்பலாம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதும், ஏனைய உதவிகள் செய்வதும் எந்த விதத்திலும் குறை காணமுடியாத, நிராகரிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

ஆனால் தடுப்புக் காவலில் இருப்பவர்கள் விடயத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கம் நிச்சயமாக ''தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடும்'' வேலையைப் பார்க்கிறது என்பது மட்டும் நிச்சயம். சரியாகச் சொல்வதானால் முதலில் பிள்ளையைக் கிள்ளி விட்டுப் பின்னர் தொட்டிலை ஆட்டப் பார்க்கிறது. இது வேடிக்கையானது மட்டுமல்ல; விபரீதமானதும் ஆனதாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு பிரஸ்தாப ஒப்பந்தம் வகை செய்கிறது. ஆனால் 1250க்கும் மேற்பட்ட கைதிகள் இன்னமும் தென்னிலங்கைச் சிறைகளில் அடைத்து வைத்து இம்சிக்கப்படுகிறார்கள்.

ஒப்பந்தம் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி, அவர்களை விடுவிப்பதற்கு வகை செய்தாலும் அது தலைகீழாக நடைமுறையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. கைதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக எழுந்த மானத்தில் சிலர் மீது குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு, வழக்குகள் தொடரப்பட்டு, தண்டனையும் வழங்கப்படுகிறது.

தம்மை விடுக்கக் கோரியும், பொதுமன்னிப்பு வழங்காமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் தென்னிலங்கைத் தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ் அரசியற் கைதிகளில் அறுவர் கடந்த ஐந்து நாட்களாகச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசோ அல்லது இந்தியப் பிரதமரோ இது விடயத்தில் கரிசனை காட்டி நடவடிக்கை எதிலும் ஈடுபட்டதாக இந்தப் பத்தி எழுதப்படும் வரை எவ்வித தகவலும் இல்லை.

தடுப்பு முகாம்களிலும், சிறைக் கூடங்களிலும் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் இதற்கு முன்னரும் நீதி கோரி - நியாயம் கோரி - அகிம்சைப் போராட்டங்களை நடத்துவது உண்டு ஆனால் ஸ்ரீலங்கா அரசின் கண்ணுக்கு அகிம்சைப் போர் புலப்பட்டதில்லை; அதில் அக்கறைப்பட்டதும் இல்லை.

தடுப்புக் காவல் கைதிகளை விடுவித்து விட்டால் அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய தேவை இல்லை.

அவர்களை அடைத்து வைத்துக் கொண்டு, அவர்களது உண்ணாவிரதப் போராட்டத்துக்குச் சிறிதளவேனும் மதிப்புக் கொடுக்காது. தான் நினைத்ததைச் செய்யும் ஸ்ரீலங்கா அரசின் நிவாரண வேலைகள் வெறும் நீலிக் கண்ணீரே!

நிவாரணம் வழங்குதல் என்பது இன்னும் நீண்ட காலத்திற்கு அவர்களை சிறைப்படுத்தி வைத்திருக்கும் திட்டத்தின் மறுமுகமோ என்று ஐயுற வேண்டி உள்ளது.

ஸ்ரீலங்காவின் இந்த அடாத போக்கை, இந்திய அரசு வாய் மூடி மௌனியாகப் பார்த்து நிற்பது, மிகமிகக் கவலையும் மனவேதனையும் தருவதாகும்.

## சீனாவில் அதிகாரப் போட்டி

### இம்மாதம் 25 இல் நாடாளுமன்றக் கூட்டம்

பீஜிங், மார்ச் 21

சீன நாடாளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இச்சமயத்தில் சீன அரசுத் தலைமைப் பீடத்தில் அதிகாரப் போட்டி ஆரம்பமாகி இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

பழமைவாதிகள் ஒருபுறம், சீர்திருத்தவாதிகள் மறுபுறம் ஆக அதிகாரப் போட்டியில் சீனத் தலைவர்கள் சிக்கியிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பழமைவாதிகள் தரப்புக்கு பதில் பிரதமர் லீபெங் தலைமை வகிக்கின்றார்.

இவர் முன்னாள் பிரதமர் சூ என். லாயின் வளர்ப்புப் புதல்வர் சோவியத்தில் பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வியலாளர்.

சூ என் லாயின் 90 ஆவது பிறந்த தின விழாவில் சீனத்தலைவர் டெங்ஷியாபோங்கும் கம்யூனிஷ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் ஷாவோ ஷியாங்கும் கலந்து கொள்ளத் தவறியதை வைத்தே அதிகாரப் போட்டி பற்றிய தகவல்கள், ஊகங்கள் வெளிவரத் தொடங்கின. (எ)

பங்களாதேஷில்

## ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தீவிரம்

### எதிர்க்கட்சிகள் முழ்முரம்

டாக்கா, மார்ச் 21

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாத்தைப் பதவி விலகச் செய்யும் போராட்டத்தைத் தீவிரப்படுத்த எதிர்க்கட்சிக் கூட்டணிகள் தீர்மானித்துள்ளன.

பொதுஜன இயக்கமாக போராட்டத்தை நடத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டுவதில் எதிர்க்கட்சித் தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இதனிடையில் ஜனாதிபதி எர்ஷாத்தின் ஆளும் கட்சியில் உறுப்பினர்கள் நான்குபேர் நாட்டில் இருந்து வெளியேறத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் பாஸ்போர்ட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சென்ற மூன்றும் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டதை இந்த நால்வரும் எதிர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### மரண தண்டனை ஒத்திவைப்பு

கேப்டவுன், மார்ச் 21

ஆறு கறுப்பு இன எதிரிகள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை உத்தரவு ஒரு மாத காலத்துக்கு ஒத்திப் போடப்பட்டது.

தென் ஆபிரிக்க உயர் நீதிமன்றம் இத் தீர்ப்பைப் பிறப்பித்தது.

இவர்கள் அறுவரும் கடந்த வெள்ளிக்கிழமை தூக்கிலிடப்படவிருந்தனர்.

கறுப்பு இன அரசு அதிகாரி ஒருவரை நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கொலை செய்த குற்றத்துக்காக இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது

இவர்கள் விஷயத்தில் கருணை காட்டும்படி உலகத் தலைவர்கள் பலர் தென் ஆபிரிக்க அரசுக்கு விண்ணப்பித்திருந்தனர். (எ)

## தகராறுகளைப் பேசித்தீர்ப்போம்; சீனாவுக்கு வியட்னம் அழைப்பு

ஹனோய், மார்ச் 21

ஸ்பிரட்லி தீவுக் கூட்டம் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுக்கள் நடத்த முன்வருமபடி வியட்னம், சீனாவுக்கு அழைப்பு விடுத்தது.

இத் தீர்வுக் கூட்டம் யாருக்குச் சொந்தம் என்ற தகராறு குறித்து இரண்டு நாடுகளின் யுத்தக் கப்பல்களும் கடந்த திங்கட்கிழமை சண்டையில் ஈடுபட்டன

உத்தேச பேச்சுக்கள், இரு நாடுகளின் எல்லைப் புறத் தகராறுகளுக்கும் தீர்வு காணுவதாக அமைய வேண்டும் என்றும் வியட்னம் தெரிவித்திருக்கின்றது. (எ)

## ஆண் குழந்தை வேண்டி இரண்டு சிறுமிகள் பலி!

பம்பாய், மார்ச் 21

ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காக இரண்டு சிறுமிகள் பலி கொடுக்கப்பட்டார்கள்

இப்பரிதாப நிகழ்ச்சி மகாராஷ்டிர மாநிலத்தில் சிஹோட்த ஹுாவில் இடம் பெற்றது.

இத்தகவலை மாகராஷ்டிர முதலமைச்சர் எஸ். பி. சவான், சட்டசபையில் தெரிவித்தார்.

இரண்டு சிறுமிகளின் சடலங்களும் பற்றைக் காட்டினுள் கண்டெடுக்கப்பட்டன என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (எ)

### ஐ. என். எஸ் சிந்துராஜ் மூன்றாவது நீர்மூழ்கி

பம்பாய், மார்ச் 21

சோவியத் தயாரிப்பான மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பல் இந்தியக் கடற்படையில் சேர்ந்து கொண்டது.

ஐ. என். எஸ். சிந்துராஜ் என்று இந்த நீர் மூழ்கிக்கு பெயரிடப்பட்டிருக்கிறது.

## இந்திய மத்திய அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்?

புதுடில்லி, மார்ச் 21

இந்திய மத்திய அமைச்சரவையில் இன்னுமொரு மாற்றம் இடம் பெறலாம் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப் படுகின்றது

ராஜ்யசபாவில் காலியாகும் இடங்களுக்கு நடைபெறும் தேர்தலில் தற்போதைய இணை அமைச்சர் திரு யோகேந்திரா மக்வானாவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படாது அமைச்சரவைமாற்றம்ஒன்றுக்கு இடமிருப்பதைக் காட்டுவதாக புதுடில்லி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனிடையில் குஜராத்தில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய திரு. மாதவராவ் சோலங்கி ராஜ்யசபைக்கு இந்திரா காங்கிரஸ்வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். (எ)

## எனது நண்பர்களைக் காட்டிக் கொடுக்க முடியாது — ஜெயில்சிங்

புதுடில்லி, மார்ச் 21

''ஜனாதிபதி தேர்தலில் என்னை மீண்டும் போட்டியிட வைக்க முயன்றவர்கள் யார் என்பதை வெளியிடுவதன் மூலம் அரச ஆதாயம் பெற நான் இடம் தரமாட்டேன்'' என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் தெரிவித்தார்.

''ரவிவார்'' என்ற இந்தி இதழுக்கு அவர் அளித்த பேட்டியில் ''இது ஒரு சிறிய விஷயம் இதைத் தேவையற்ற முறையில் பெரிது படுத்த சிலர் முயற்சி செய்கின்றனர். என்னுடைய நலனில் அக்கறை உள்ள சிலர் என்னைச் சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டு கொண்டனர். ஆனாலும் கட்சி கோடிக்கணக்கில் பணம் செலவு செய்ய இருக்கிறது. என்னிடம் பணம் ஏதும் இல்லை என்றேன் அதற்கு அவர்கள் பதில் கூறுகையில் பணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் எவ்வளவு பணம் தேவை என்றாலும் ஏற்பாடு செய்வோம்'' என்றனர். அவர்கள் கூட அப்போது காங்கிரசில் தான் இருந்தனர் என்றார்.

கேள்வி: அவர்கள் இப்போதும் காங்கிரசில் தான் இருக்கின்றனரா?

பதில்: நான் ஏன் அதை உங்களுக்கு சொல்ல வேண்டும்? என்னுடைய நண்பர்களின் நலனை நான் பாதுகாப்பேன்.

கே: அவர்கள் தன்னுடைய அமைச்சரவையில் அப்போது இருந்திருக்கலாம் என்றும் இப்போது இல்லையென்றும் லோக்சபாவில் பிரதமர் கூறியிருக்கின்றாரே?

ப: நான் அவர்களைப் பாதுகாப்பேன் என்னுடைய அறிக்கை மூலம் அவர்களைக் காப்பாற்ற முடியும் என்றால் நிச்சயம் அதைச் செய்வேன். அதில் அரசு ஆதாயம் தேட இடம் தர மாட்டேன். (எ-உ)

### வெளி உலகில்

தமிழ்நாடு;

## சட்டசபைத் தேர்தலை இழுத்தடிக்க மத்திய அரசு சதி!

### இப்படியும் குற்றச்சாட்டு

சென்னை மார்ச் 21

சட்டசபைத் தேர்தல் தான் தமிழகத்துக்குத் தேவை; கூட்டுறவுச் சங்கத் தேர்தல் அல்ல

தி. மு. க. தலைவர் திரு மு கருணாநிதி முன் கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் தேர்தலை நடத்தப்போவதாக தமிழ் நாடு ஆளுநர் டாக்டர் பி. ஸி. அலெக்ஸாண்டர் அண்மையில் அறிவித்து இருந்தார் அல்லவா!

அது பற்றி விடுத்த அறிக்கை ஒன்றிலேயே கலைஞர் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை முதலில் நடத்த மத்திய அரசு முடிவு செய்திருப்பது சட்டசபைத் தேர்தலை ஒத்திப் போடச் செய்வதற்கான ஒரு சதியே.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மந்திரி அரசே கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டும். அது தான் ஒழுங்கான செயல்.

ஆனால் ஆளுநர் விடுத்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல் பற்றிய அறிவிப்பு சட்டசபைத் தேர்தலை நடத்தும் மத்திய அரசின் திட்டத்தில் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது

இப்படி அறிக்கையில் கலைஞர் தெரிவித்திருக்கின்றார். (எ)

### 2 பிரிட்டிஷ் சிப்பாய்கள் பலி!

பெல்பஸ்ட், மார்ச் 21

வட அயர்லாந்தில் இரண்டு பிரிட்டிஷ் சிப்பாய்கள் கொலைப்பட்டனர்.

ஐரிஷ் இராணுவக் கெரில்லாக்களின் தாக்குதலில் இவர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

அண்மையில் ஜிப்ரால்டரில் பிரிட்டிஷ் இராணுவத்தினால் கொல்லப்பட்ட ஐரிஷ் கெரில்லா ஒருவரின் மரணச்சடங்கு நடந்த சமயம் இத்தாக்குதல் நடத்தப்பட்டது (எ)

### தமிழ்நாடு பொலீஸ் ஆணையாளர்

தமிழ்நாடு பொலீஸ் ஆணையாளராகவும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகவும் திரு பி. துரை நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இதுவரை காலமும் இப்பதவிகளை வகித்து வந்த திரு வைக்டர் தேவாரம். ரிஸர்வ் பொலீஸ் பயிற்சி பிரிவில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார் (எ)

தென் இலங்கையில் கொல்லப்படும்

## ஊர்காவல் படையினர் குடும்பத்துக்கு நஷ்டஈடு

கொழும்பு, மார்ச்22

தென் இலங்கைத் தீவிரவாதிகளினால் கொல்லப்படும் ஊர்காவல் படையினரின் குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட உள்ளது

இதற்கான நடவடிக்கைகளில் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டு வருகின்றது.

கடந்த ஆறு மாதங்களில் பத்துக்கும் மேற்பட்ட ஊர்காவல் படையினர் தென் இலங்கையில் கொல்லப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொல்லப்படும் ஊர்காவல் படையினரின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈடு போன்று தென்இலங்கை ஊர்காவல் படையினருக்கும் வழங்கப்படும்.

உயிரிழக்கும் ஊர்காவல் படையினரின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், காயமடைந்தவரின் குடும்பத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படும்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கொல்லப்பட்டு, காயமடைந்த 26 ஊர்காவல் படையினரின் குடும்பங்களுக்கு 22 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சு அறிவித்தது

ஊர்காவல் படையை ஒழிப்பது தான் தீவிரவாதிகளின் நோக்கம். ஆனால் படை தொடர்ந்து இயங்கும்.

இப்படி அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார். (இ-எ)

மன்னார் அங்கவீனருக்கு

## ஜெய்ப்பூர் கால், கரம்

### மறுவாழ்வுச் சங்கம் நடவடிக்கை

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மன்னாரில் பாதிக்கப்பட்ட அங்கவீனர்களுக்கு உதவி செய்யும் முகமாக யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக, ஜெய்ப்பூர் கால், கரம், ஊன்றுகோல் போன்றவற்றை பெற்று வழங்க முன்வந்துள்ளது

மன்னார் மாவட்டத்தில் அங்கவீனர்களாக உள்ளவர்கள், சங்கத்தின் செயலாளருடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

இவர்கள் தறைத்தவருமானம் உள்ளவர்களாகவும் இவரை அரசாங்கம் மற்றைய பொது ஸ்தாபனங்களிலிருந்து உதவி பெறாதவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. (இ)

## பொறியியல் மாணவர் கல்வியில் அக்கறை காட்டிய உத்தமர்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

கல்லூரியின் வளர்ச்சியிலும் பொறியியல் மாணவர்களின் கல்வியிலும் அதிக அக்கறை காட்டிய உத்தமரை இழந்து நிற்கிறோம்.

மறைந்த யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் பிரிவின் தலைவரும், விரிவுரையாளருமாகிய பொ. சிவலோகநாதனின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய து இராஜன் இப்படிக் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பொறியியல் மாணவ மன்றத் தலைவர் து. இராஜன் இந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்

தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபர் திரு. இராஜேந்திரா தமதுரையில் பண்பாளன். சிறந்த கல்விமான் திரு சிவலோகநாதனின் இழப்பு ஈடு செய்ய முடியாததாகும் என்று குறிப்பிட்டார்;

இலத்திரனியல் விரிவுரையாளர் திரு ஸ்ரீநிவாசன், அளவையியல் விரிவுரையாளர் சந்திரசேகரம், மாணவர்கள் சந்திரராசா, சஜபன், திருஸ்ணமூர்த்தி ஸ்ராண்லி மோகன் ஆகியோரும் உரையாற்றினர்

செல்வி பத்மஜோதி, நடராஜ் ஆகியோர் கண்ணீர் அஞ்சலிக் கவிதை பாடினர்

அன்றைய தினம் திரு. பொ சிவலோகநாதனின் உருவப்படமும் திரை நீக்கம் செய்யப்பட்டது. (இ-க)



### பொய்யாமொழி

குறள்:

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாவிய தெல்லாம் ஒருங்கு.

பொருள்:

அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவிய பரப்பு ... அரசன் ஒருசேர அடைவான்.

## தாய்வான் அணுவிஞ்ஞானி அமெரிக்காவில் தஞ்சம்

அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் தாய்வானில் இருந்து மர்மமான முறையில் காணாமற்போய் விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

45 வயதான திரு. ஷ ஸ் ஹிசென் யீ அமெரிக்காவில் தஞ்சமடைந்திருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் தாய்வான் ஈடுபட்டு உள்ளது என்பதை நிரூபிக்கும் ஆதாரதஸ்தாவேஜுகளுடன் தான் இவர் அமெரிக்காவுக்கு சென்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது

தாய்வானில் உள்ள அணு ஆராய்ச்சி ஸ்தாபன உதவி இயக்குனராகவும் இவர் பணியாற்றி வந்தார்.

இவரை கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது

இவர் ஓர் அமெரிக்க உளவாளி என்று தாய்வான் பத்திரிகைகள் செய்திகள் பிரசுரித்துள்ளன

சமய சந்நிதிகளில்

### மகாயாகம்

யாழ்ப்பாணம், மார்ச்22

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான உலக க்ஷேமார்த்தம் முருகபக்தர்களால் நடத்தப்படும் மகாயாகம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது

இந்தயாகம் இன்றும் நடைபெற்று நாளை திருவீதியுலாவுடன் முடிவடையும். (இ-க-9)

### துர்க்காபரமேஸ்வரி அம்பாள் ஆலயம்

காங்கேசன்துறை, மார்ச், 22

காங்கேசன் துறை துர்க்கா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது

அடுத்த மாதம் முதலாம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் காங்கேசன்துறை கங்கையில் தீர்த்த உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

(இ-68)

### வைரவர் ஆலயம்

அச்சுவேலி மார்ச் 22

அச்சுவேலி பத்திமுடி நரசிங்க வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும். (இ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
நீங்கள் வாங்கும் அண்ணா றொபி லேபிள்களை சேர்த்துக் கொடுத்து கீழ்வரும் இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
பூனைக்குட்டி லேபிள்
நேரசூசி
அண்ணா தொழிலகம்
இணுவில்.



# உதயன்

22.03.1988 செவ்வாய்க்கிழமை



வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி
அரிசி மா, வறுத்த அரிசி மா,
வறுத்த உழுத்தம் மா
பக்கட்டுகளாகவும், சாக்குகளிலும்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம்


## சிவாஜியின் புதிய கட்சிக் கொடிக்குத் தடை?

சென்னை, மார்ச் 22
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அமைத்துள்ள தமிழக முன்னேற்ற முன்னணியின் கட்சிக் கொடிக்கு தடைவிதிக்கப்படலாம்.

சிவப்பு-வெள்ளை நிறமுடைய இந்தக் கொடியை தமிழக முன்னேற்ற முன்னணி உபயோகிப்பதை ஆட்சேபித்து சிவாஜி கணேசனுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்தமானின் தலைநகர் போர்ட்பிளேயரில் இருந்து இயங்கிவரும் அந்தமான் மக்கள் கட்சி இந்த வக்கீல் நோட்டீஸை அனுப்பியிருக்கிறது. இந்த நோட்டீஸின் பிரதிகள் தமிழக தேர்தல் ஆணையாளருக்கும் தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

தமது கட்சியின் யாப்புக்கமைய சிவப்பு-வெள்ளைக்கொடி அமைக்கப்பட்டு, அது தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்தையும் பெற்றிருப்பதாக நோட்டீஸில் அந்தமான் மக்கள் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதனால் தமிழக முன்னேற்ற முன்னணி தற்போது பிரகடனப்படுத்தியிருக்கும் சிவப்பு-வெள்ளைக் கொடிக்கு தடை விதிக்கப்படலாம் எனத் தமிழக அரசியல் வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது [உ]

## வேடர் தலைவர் வீட்டுக் காவலில்

கொழும்பு, மார்ச் 22
வேடர் தலைவர் திஸ்ஸஹாமி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

"மாதுறுஓயா தேசிய சரணாலயத்தில் இருந்து வெளியேற மறுத்துவருவதைத் தொடர்ந்தே, திஸ்ஸஹாமி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப்படிக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டார் மற்றும் நண்பர்கள் திஸ்ஸஹாமியைச் சந்திக்கமுடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர்.

மகாவலி அமைச்சு அதிகாரிகள்கூட திஸ்ஸஹாமி இருக்கும் பகுதிக்குச் செல்வதானால் அமைச்சரிடமிருந்து அனுமதி பெற்று வேண்டும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடியமரும்படி விடுத்த வேண்டுகோளை, திஸ்ஸஹாமி புறக்கணித்ததால் வந்த வினை இது.

இத்தடை மூலம் அவரின் வருமானம்குறைந்து விடும் அவர் தானாக வெளியேறிவிடுவார் என்பது அதிகாரிகளின் எண்ணம். (ஓ-எ)

## ஸ்ரீலங்கா இராணுவம் தமிழர் பகுதிகளுக்கு ஆகாது

### இந்திய அரசிடம் இடித்துரைப்பு

புதுடில்லி, மார்ச் 22
ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புக்கள் தமிழர் பகுதிகளில் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்திய மத்திய அரசிடம் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

இந்திய எதிர்க்கட்சிகள் இக் கோரிக்கையை விடுத்துள்ளன.

மத்திய அரசுக்கு அனுப்பிவைத்த வேண்டுகோளில் ஜனதா, தெலுங்குதேசம் கட்சி, பாரதீய ஜனதா கட்சி, காங்கிரஸ் (எஸ்), அ.தி.மு.க, அகாலிதள் (பாதல்பிரிவு) ஆகியவற்றைச் சேர்ந்த பதினொரு எம்.பிக்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதலை நிறுத்தி உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளும்படியும் சம்பந்தப்பட்ட பதினொரு எம்.பிக்களும் இந்திய அரசுக்கு மேலும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். [ஓ-எ]

## திருமலைக்குக் கூடுதல் ஸ்ரீலங்கா இராணுவம் அனுப்பப்பட்டது

கொழும்பு, மார்ச் 22
திருகோணமலைமாவட்டத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கூடுதலாக அனுப்பப்பட்டுள்ளனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்து அகதிகளான சிங்கள மக்கள் பழைய இடங்களுக்குத் திரும்பி நம்பிக்கையுடன் வாழ வழி செய்யுமுகமாகவே ஸ்ரீலங்கா இராணுவம் அனுப்பப்பட்டிருப்பதாக கொழும்பில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்படி அந்தச் செய்தி மேலும் கூறியது. (ஓ-எ)

## ★ நகை கையளிப்பு திகதி விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
மக்கள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளளிப்பதற்கான திகதியும் இடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன

இரண்டு இடங்களில் வைத்து இவை மீளளிக்கப்படும்.

யாழ் பிரதான வீதி மக்கள் வங்கி, (நிலையம் 1), யாழ் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி (நிலையம் 2) ஆகியவற்றில் வைத்தே நகைகள் மீளளிக்கப்படும்

28 ஆம்திகதி (திங்கள்) நிலையம் 1:- புங்குடுதீவு நகைகள். யாழ் பிரதான வீதி நகைகள். நிலையம் 2:- யாழ் ஸ்ரான்லி வீதி நகைகள்.

29 ஆம் திகதி (செவ்வாய்) நிலையம் 1:- சுன்னாகம் நகைகள் நிலையம் 2:- ஸ்ரான்லி வீதி நகைகள்.

30 ஆம் திகதி (புதன்) நிலையம் 1:- சுன்னாகம் நகைகள் நிலையம் 2:- நெல்லியடி நகைகள்

31 ஆம் திகதி (வியாழன்) நிலையம் 1:- சுன்னாகம் நகைகள். நிலையம் 2:- நெல்லியடி நகைகள்

ஏப்ரல் 4 ஆம் திகதி (திங்கள்) நிலையம் 1:- யாழ் பிரதான வீதி நகைகள். நிலையம் 2:- நெல்லியடி நகைகள்

5 ஆம் திகதி (செவ்வாய் நிலையம் 1:- யாழ் பிரதான வீதி நகைகள். நிலையம் 2:- நெல்லியடி நகைகள்.

6 ஆம் திகதி (புதன்) நிலையம் 1:- யாழ் பிரதான வீதி நகைகள், நிலையம் 2:- பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை நகைகள். [இ-க]

## 8 மாதங்களில் 82 அரசியல் கொலைகள்

கொழும்பு, மார்ச் 22
கடந்த எட்டு மாதங்களில் நாட்டில் 82 அரசியல் கொலைகள் நடந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

ஆகக் கூடுதலானோர் தென் இலங்கையிலுள்ள தங்காலையிலும் (15 பேரும்), இரத்தினபுரியிலும் (14பேரும்) கொல்லப்பட்டனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

**கூட்டணி- -**
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

பத்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கல்முனைக்குடியில் திரு வேல்முருகுவின் சடலம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையைக் கட்டுப்படுத்த 20 மணி நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகப் பொலீஸ் அதிபர் செனவிரத்ன தெரிவித்தார். (ஓ-எ)

**பல்கலைக் - - - -**
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
மட்டுமே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும்

இப்போது பொதுவாக மூன்றாவது அமர்விலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவது குறிப்பிடத்தக்கது (ஓ-க-9)

**பருத்தித்துறை - -**
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வித்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருந்த பகுதியில் தற்போது இந்திய அமைதிகாக்கும் படை முகாமிட்டுள்ளது.

இதனையடுத்து ஏற்கனவே இடம்பெயர்ந்த ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரி ஆகியன பழைய இடங்களிலேயே இயங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

அத்துடன் விரைவில் 751இலக்க பஸ்கள் கடற்கரை வீதியால் சேவையை நடத்தவுள்ளன என்றும் தெரியவருகிறது
(இ 160-70-118)

**நகைகள் - - - -**
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வாக இது கைகூடியுள்ளது.

சம்பந்தப்பட்ட தொகுதி நகைகளை மக்கள் வங்கியினர் விரைவில் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கத் தொடங்குவார்கள்

இவ்வாறு இந்திய அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் அலுவலகத்திலிருந்து நேற்று விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது (அ)

## அடகு நகை - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வற்றில் வைத்தே நகைகள் மீளளிக்கப்படும்.

ஸ்ரான்லி வீதி, பிரதானவீதி, காங்கேசன்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, புங்குடுதீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளைகளில் பணம் செலுத்தி பலாலி கோட்டை முகாம்களிலிருந்து மீளப் பெறும் அத்தாட்சிக் கடிதங்களை ஏற்கனவே பெற்றவர்களுக்கும் –

ஸ்ரான்லி வீதி, பிரதானவீதி, பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளில் பணம் செலுத்தியவர்களுக்கும் நகைகள் மீளளிக்கப்படும்.

இம்மாதம் 28, 29, 30, 31ஆம் திகதிகளிலும், ஏப்ரல் மாதம் 4,5,6ஆம் திகதிகளிலும் நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தோர் குறிப்பிட்ட திகதிகளில் தமது அடையாளக் கார்ட், வங்கியில் பணம் கட்டிய ரசீது, அத்தாட்சிக் கடிதம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தினமும் காலை 9 மணி முதல் 12 மணிவரை இந்திய அமைதி காக்கும் படையின் பாதுகாப்புடன் நகைகள் மீளளிக்கப்படும்.

பிரதான வீதி, ஸ்ரான்லி வீதி பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளில் பணம் கட்டியும் கடிதங்கள் கிடைக்காப் பெறுநவர்கள் உடன் தமது கிளைகளுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அடகு நகைகளை மீளப் பெறுவதற்கு இன்னமும் பணம் செலுத்தாதோர் பணத்தைக் கட்டினால் மட்டுமே மீதி நகைகளை இங்கு கொண்டுவர முடியும் என்று மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் எம். கணேசசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

## இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 22
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நீராவியடியில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் கழுத்திலும், மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக இறந்து கிடக்கக் காணப்பட்டார்

பின்னர் இவர் கடையிற்சுவாமி ஒழுங்கையைச் சேர்ந்த பெருமாள் கணேசன் (20) என அடையாளம் காணப்பட்டது.

## பாதுகாப்புக் கேட்கிறது புதிய கட்சி

கொழும்பு, மார்ச்22
மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு அரசு பூரண பாதுகாப்பு வழங்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு முன்வைத்த வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

பதுளை, குருணாகல், புத்தளம் மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ்வேட்பாளர் போட்டியிடுகின்றனர். (ஓ-எ)


## யாழ்.- கொழும்பு விமான சேவை

பலாலிக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன்
ஒழுங்காக நடைபெறுகின்றது.

23-3-88 புதன்கிழமை
வெற்று ஆசனங்கள் உண்டு.
பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days. Special discount for Studios and bulk handling.

வெளிநாடுகளுக்கு விமான ரிக்கற், பாஸ் போட் Renewal and Alteration and Bonding, விசா, Indian Visa, Confirmation Reconfirmation and Cancellation ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

எங்கள் காரியாலய மேல் மாடியில் (with attached bath rooms) சகல வசதிகளுடன் அறைகள் எங்கள் பிரயாணிகளுக்கு மட்டும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

MACK
Communications & Travels

இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



உ
## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பிரபவ வருடம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (23 03-1988) புதன்கிழமை காலை 11 27 தொடக்கம் 11 56 வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

திரு திருமதி வ. இ. வயித்திலிங்கம்
அவர்களின் கனிஷ்ட புதல்வன்
செல்வன்
சத்தியலிங்கப் (சக்தி)
அவர்கட்கும்

திரு. வ. இரத்தினவேல்
(இளைப்பாறிய வருமான பரிசோதகர் கொழும்பு மாநகரசபை)
அமரர் திருமதி செல்வரத்தினம் இரத்தினவேல்
அவர்களின் கனிஷ்ட புத்திரி
செல்வி.
வசந்தராணி (வசந்தா)
அவர்கட்கும்

இறைவன் அருளால் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வ. இ வயித்திலிங்கம்
(K. V. G) பீடி உரிமையாளர்
பாரியாரும்
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை

வ. இரத்தினவேல்
28, உலகுடையார் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை
(2110)



THANK YOU
ST. JUDE
FOR FAVOUR
GRANTED
RANI
(2012)



## முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

எனது V. MAHESWARAN என்ற பெயரைப் பத்திரிகைகளில் பிரசுரித்து ஒரு சிலர் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். அவர்களுக்கும் எனக்கும் எதுவிததொடர்பும் இல்லை.

T. V. Travels
& Tourist
Brown Road, Kokuvil.

இந்த நிறுவனத்துடன் மட்டும் தான் எனக்கு யாழ்ப்பாணத்தில் தொடர்பு உண்டு என்பதை அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு
V. மகேஸ்வரன்


## நீத்தார் பட்டியல்

### ஐ. இராஜதுரைப் பத்தர்

திரு ஐ இராஜதுரைப்பத்தர் காலமாகிவிட்டார். அன்னார் செல்வத்துரை நகைமாளிகை முகாமையாளரும், இராசரெத்தினம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கணேசராஜா (Theeby Jewellers), தவராஜா (Lanka Cement Ltd V.M.S Mechanic), ஜெயராஜா (அனித்தா மோட்டோ வேக்ஸ், நெடுங்கேணி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுப்பிரமணியம் (மணி) அவர்களின் அன்புச் சகோதரரும், வரதராஜா, இரவீந்திரன் (அனித்தா மோட்டோ வேக்ஸ். நெடுங்கேணி), நவராணி, தயாநிதி ஆகியோரின் மாமனாரும், ரஞ்சன், கேமா, அநந்ததி, ஜெயராகவன, அனித்தா, அலோஜினா, மயூரன் ருஜினி, நிமேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-3-88 புதன்கிழமை காலை 9 00 மணிக்கு 3/15 கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியிலிருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
இ. கணேசராஜா
(2661)

8/=

### திருமதி வல்லிபுரம் நல்லம்மா

திரு வல்லிபுரத்தின் அன்பு மனைவியான நல்லம்மா அவர்கள் 20-3-88 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். இவர், மீனலோஜனி (ஆசிரியை C.C.T.M. வவுனியா), கருணானந்தன் (தபால் அதிபர், வெள்ளவத்தை), ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற சச்சிதானந்தன் (பிரான்ஸ்), ரவி (இங்கிலாந்து), ரஞ்சினி சுலோசனா (இங்கிலாந்து), சந்திரவதனா. வசந்தலீலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி ஸ்ரீஸ்கந்தராசா, (N.S ரஞ்சனி பான்ஸி) ஸ்ரீஸ்கந்தகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

ஈமக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(2662) தகவல்: ஸ்ரீஸ்கந்தசாமி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 22-03-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by NewUthayan Publications (Pvt) Ltd 292/2 NavalarRoad, Jaffna on Tuesday, 22nd March 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org